# பெரியோர் ஓய்வுநாட் பள்ளிப் பாடங்கள்

நான்காம் காலாண்டு, 2017

## விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிப்பு: ரோமர் புத்தகம்


1. ரோமில் அப்போஸ்தலனாகிய பவுல் (செப்டம்பர் 30-அக்டோபர் 6) ....... 6
2. சர்ச்சை (அக்டோபர் 7–13) ....... 14
3. மனிதர்களின் நிலை (அக்டோபர் 14–20) ....... 22
4. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் (அக்டோபர் 21–27) ....... 30
5. ஆபிரகாமின் விசுவாசம் (அக்டோபர் 28–நவம்பர் 3) ....... 38
6. ஆதாமும் இயேசுவும் (நவம்பர் 4–10) ....... 46
7. பாவத்தை மேற்கொள்ளுதல் (நவம்பர் 11–17) ....... 54
8. ரோமர் 7இன் மனிதன் யார்? (நவம்பர் 18–24) ....... 62
9. ஆக்கினைத் தீர்ப்பில்லை (நவம்பர் 25–டிசம்பர் 1) ....... 70
10. வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்கள் (டிசம்பர் 2–8) ....... 78
11. தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் (டிசம்பர் 9–15) ....... 86
12. நன்மையால் தீமையை வெல்லுதல் (டிசம்பர் 16–22) ....... 94
13. கிறிஸ்தவ வாழ்க்கை (டிசம்பர் 23–29) ....... 102



பாட ஆசிரியர்கள்

பெரியோர் வேதபாட ஆராய்ச்சி குழுவினர்

தமிழாக்கம்

மார்சல் ஐசக்



தென்கிழக்கு இந்திய ஒன்றியம்

செவந்த்-டே அட்வென்டிஸ்ட் திருச்சபை

197, ஜீ. எஸ். டி. சாலை, வண்டலூர், சென்னை – 600 048



# இதுவே எங்கள் கருத்து: ரோமர் நிருபம்பற்றி மார்ட்டின் லூதர்

ஐநூறு வருடங்களுக்குமுன் இதே மாதம் 31 ஆம் தேதி, வேதாகமப் பேராசிரியரான 33 வயது மார்ட்டின் லூதர், தொன்னூற்றொன்பது கோட்பாடுகளை ஒரு தாளில் எழுதி, ஆலயக்கதவில் ஒட்டினார். பாவ மன்னிப்புச் சீட்டுகளை விற்று, மக்களிடம் பணம் கறந்துகொண்டிருந்த ஏமாற்றுக்காரப் போப்புவுக்கு ஆட்சேபம்தெரிவிப்பதற்காக அப்படிச் செய்தார்; ஆனாலும், லூதரின் இந்தத் துணிச்சலான செயல்தான் புரொட்டஸ்டன்ட் சீர் திருத்தத்தைப் பற்றவைக்கும் பொறியாக இருந்தது; அதன்பிறகு உலகமே மாறிப்போனது.

1517ம் வருடத்தின் அந்த நாளுக்குப்பிறகு ஏராளமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால், ரோமை எதிர்ப்பதற்கும் **விசுவாசத்தினால்மட்டுமே இரட்சிப்பு** என்கிற மாபெரும் செய்தியை இலட்சக்கணக்கானோருக்கு அறிவிப்பதற்கும் அடிப்படையாக இருந்த தேவவார்த்தையும் அதிலுள்ள சத்தியங்களும் மாறாமல் அப்படியே உள்ளன.

அந்த அடிப்படை காணப்படுகிற ரோமர் புத்தகம்தான் இந்தக் காலாண்டில் நம் முடைய ஆராய்ச்சியாகும். ரோமர்பற்றி லூதர் இப்படியாக தன் விளக்கவுரையில் எழுதி னார்: "இந்த நிருபம்தான் புதிய ஏற்பாட்டின் பிரதானமான பகுதியாகும்; மிகத்தூய்மை யான நற்செய்தியாகும்; ஒவ்வொரு கிறிஸ்தவரும் இதன் ஒவ்வொரு வார்த்தையையும் மனப்பாடமாக அறிந்திருக்கவேண்டும்; மேலும், ஆத்துமாவின் அனுதின அப்பமாக ஒவ் வொரு நாளும் இதைப் புசிக்கவேண்டும்." - *Martin Luther, Commentary on Romans, translated by J. Theodore Mueller (Grand Rapids, Mich.: Kregel Publications, 1976), p. 8.*

'**விசுவாசத்தினால்மட்டுமே இரட்சிப்பு**' என்கிற மாபெரும் சத்தியத்தை ரோமர் புத்தகத்தில் தான் லூதர் கண்டுகொண்டார். இரட்சிப்பின் நிச்சயம்குறித்து தடுமாறி வந்த லூதர், 'ஆதி காலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட' இரட்சிப்பின் நிச்சயம்குறித்து ரோமர் புத்தகம்மட்டுமல்ல, புதிய ஏற்பாடு மட்டுமல்ல, வேதாகமம் முழுவதும் சொல் கிற மாபெரும் சத்தியத்தைக் கண்டுகொண்டார். 2தீமோ 1:9. **கிறிஸ்துவின் நீதியினால் மட்டுமே இரட்சிப்பு கிடைக்கிறது** என்கிற சத்தியம்தான் அது. நியாயப்பிரமாணத்தைக் கைக் கொள்வதால் அல்ல, விசுவாசத்தினால் இந்த நீதியானது நமக்கு அருளப்படுகிறது. அல்லது, ரோமரில் பவுல் தெளிவாகச் சொல்வதுபோல, 'மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான்.' ரோமர் 3:28.

இந்தச் சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டுதான் உலகத்தின் வல்லமைகளுக்கும் அரசுகளுக்கும் எதிராக, 1521இல் வோம்ஸின் அரசவைக்குமுன் லூதர் நின்று, "நான் பின்வாங்குவதில்லை; பின்வாங்கவும் முடியாது; ஒரு கிறிஸ்தவன் தன் மனச்சாட்சிக்கு எதிராகப் பேசுவது பாதுகாப்பானதல்ல. என் கருத்தில் உறுதியாக இருக்கிறேன், அதிலிருந்து மாறமுடியாது" என்று சொன்னார். *J. H. Merle D'Aubigné, D.D., History of the Reformation, translated by H. White (New York: American Tract Society, 1848), p. 249.*

இன்றும் உண்மையுள்ள புரொட்டஸ்டண்டுகள் வேதாகமத்திற்குப் புறம்பான பாரம்பரியங்களையும் கோட்பாட்டையும் எதிர்த்து, தேவ வார்த்தையில் உறுதியாக நிற்க வேண்டும்.

லூதரின் காலத்திற்குப்பிறகு கிறிஸ்தவமார்க்கம் எவ்வளவோ வளர்ந்துள்ளது. பல நூற்றாண்டுகளாக சத்தியத்தைத் திரித்த, சத்தியத்தை அடக்கமுயன்ற பொய்க்கோட்பாடுகள் மற்றும் மூடநம்பிக்கைகளிலிருந்து தன்னை விடுவித்துள்ளது.

**'விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு' என்கிற மாபெரும் சத்தியத்தை ரோமர் புத்தகத்தில்தான் லூதர் கண்டுகொண்டார்.**

ஆனாலும், நீண்ட காலமாக சீர்திருத்தம் பரவாமலேயே தேங்கிநின்றது. சில இடங்களில் சமயமரபானது அதன் வளர்ச்சியைத் தடுத்தது; வேறு சில இடங்களில் மக்கள் ரோம மார்க்கத்திற்கே திரும்பினார்கள். கிறிஸ்தவ சபைகளுக்குமத்தியில் ஒற்றுமை வேண்டும் என்றும், எம்மதமும் சம்மதம் என்றும் மனநிலை காணப்படுகிற இக்காலக் கட்டத்தில், முன்பு சீர்திருத்தத்தைத் தூண்டிவிட்ட முக்கியச் சத்தியங்களை பலர் மறந்துவிட்டார்கள்; வஞ்சகப் போதகங்கள் என்கிற தொடர்த்தாக்குதல்கள் அவற்றை மறைத்தும் வருகின்றன; லூதரின் காலத்தில் தீர்வுகாண முடியாதிருந்த அடிப்படை வேறுபாடுகளுக்குத் தீர்வுகாணாமலேயே அவற்றை இந்தப் போதகங்கள் மறைக்கப்பார்க்கின்றன. சில சத்தியங்களை நம் புரொட்டஸ்டன்ட் முற்பிதாக்கள் உயர்த்திப்பிடித்தார்கள்; அவற்றுக்காக தங்கள் உயிரையும் விடுவதற்கும் ஆயத்தமாக இருந்தார்கள். இன்று வேதாகமத்திற்கு உண்மையாக இருப்பவர்கள் அந்தச் சத்தியங்களை பற்றிப்பிடித்துக்கொள்ளவேண்டும். அதற்கான காரணங்களை தானி *7:23-25; 8:9-12;* வெளி *13,14* ஆகியவற்றின் தீர்க்கதரிசனங்களும், **விசுவாசத்தினால் இரட்சிப்பு** என்கிற மாபெரும் நற்செய்தியும் காட்டுகின்றன.

**வேதாகமம், வேதாகமம்மட்டுமே** என்கிற நியதிதான் செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் கிறிஸ்தவர்களுக்கு அடித்தளமாக இருக்கவேண்டும்; கிறிஸ்தவர்களை மீண்டும் ரோமுக்கும் சீர்திருத்திற்கு முந்தைய விசுவாசத்திற்கும் இழுக்கிற சகல முயற்சிகளையும் முழுப்பலத்தோடு நாம் புறக்கணிக்கவேண்டும். அதற்கு நேர்மாறாக, வேதாகமம் காட்டுகிற வழியில் (வெளி *18:4*) நாம் செல்லவேண்டும்; *500* வருடங்களுக்குமுன்பு லூதருக்கு ஊக்கமளித்த அதே நித்திய சுவிசேஷத்தை, அதாவது வெளி *14:6* சொல்லும் 'நித்திய சுவிசேஷத்தை' அறிவிக்கவேண்டும்.

# மனன வசனங்கள்

1 உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தம் ஆகிறதினாலே, முதலாவது நான் உங்கள் எல்லாருக்காகவும் இயேசுகிறிஸ்து மூலமாய் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ரோமர் 1:8.

2 நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின. யோவான் 1:17.

3 எல்லோரும் பாவஞ்செய்து, தேவமகிமை அற்றவர்கள் [ஆனோம்]. ரோமர் 3:23.

4 ஆதலால், மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமான் ஆக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம். ரோமர் 3:28.

5 விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல; நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே. ரோமர் 3:31.

6 இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம். ரோமர் 5:1,2.

7 நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது. ரோமர் 6:14.

8 இப்பொழுது நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். ரோமர் 7:6.

9 ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாய் இருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. ரோமர் 8:1.

10 ஆதலால், எவன்மேல் இரக்கமாயிருக்க சித்தமாயிருக்கிறாரோ அவன்மேல் இரக்கமாயிருக்கிறார், எவனைக் கடினப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனைக் கடினப்படுத்துகிறார். ரோமர் 9:18.

11 இப்படியிருக்க, தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரோ, என்று கேட்கிறேன், தள்ளிவிடவில்லையே; நானும் ஆபிரகாமின் சந்ததியிலும் பென்யமீன் கோத்திரத்திலும் பிறந்த இஸ்ரவேலன். ரோமர் 11:1.

12 நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். ரோமர் 12:2.

13 நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயசனத்திற்கு முன்பாக நிற்போமே. ரோமர் 14:10.